சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP NO. **172 / 2020**

பெயர்: சுப்புலட்சுமி ம.சா. 1 தேதி 23.09.2025

இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் விபத்து அருகில் இல்லை. யாருடைய கவனக்குறைால் விபத்து நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. என் மகன் ஓட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. ஆதனால் மனு குறைபாடு உடையது என்றால் சரியல்ல. மனுவானது தள்ளுபடி செய்யவேண்டும் என்றால்சரியல்ல. விபத்திற்கு முழுகாரணம் எனது மகன், முதல் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் மீது எவ்வித தவறும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மனு விபத்து குறித்த குற்ற வழக்கின் மாதிரி வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனை தாக்கல் செய்தால் எனது மகனின் தவறும் தெரிந்துவிடும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மகனின் வயது, தொழில், வருமானம் ஆகியவற்றி நிரூபிக்கக்கூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மனு விபத்து சமயத்தில் முதல் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. எனவே, இரண்டாவது எதிர்மனுதாரரின் நிறுவனம் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. மனுதாரருக்கு ஏதேனும் இழப்பீடு வழங்கப்படவேண்டும் என்றால் முதல் எதிர்மனுதாரர் தான் கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. இரண்டாவது எதிர்மனுதாரரை பொறுத்து மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- ( ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.